தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

வெள்ளி | 9 – 10 – 59 | விலை 16 காசு

நாகபுரியில் அழைப்பிதழ்! நவீன்நகரில் வெளியேற்றல்!

★

பட்டமேறிய பண்டிதர் மகளின் வாதம்!

ப.வாணன்

"நாட்டின் நலங்கருதி தங்கள், தங்கள் சொந்த அபிப்பிராயங்களேயும், கொள்கை வேறுபாடுகளேயும் மறந்து, காங்கிரஸ் போர்வைக்குள் எல்லோரும் வரவேண்டும்!"

நாகபுரியிலே பட்ட மேறிய நாரீமணியின் அழைப்ப[illegible] இது. "குறுகிய மனப்பான்மை கொண்டவர்களே! இதோ பாருங்கள், எங்கள் பண்டிதரின் வாரிசு விடுத்துள்ள அழைப்பை! தேங்கிப் போயிருந்த காங்கிரசை தட்டியெழுப்பி, நாட்டிலே நல்லது பல செய்ய, பண்டிதருக்குப் பக்கத் துணையாக நிற்க முன் வந்துள்ள அருமை மகள் இந்திரா கருத்து வேறுபாடு கொண்டோரையும் கைகூப்பி அழைப்பதை காணீர்! அவருடைய பரந்த மனப்பான்மையை எப்படி வினக்குவது? குலத்திற்கேற்ற குணம்; குடும்பத்திற்கேற்ற பண்பு!" என றெல்லாம் கூறி இந்த அழைப்பின்பேரில் கிருபாளனி வரலாம்; ஜெயப்பிரகாஷ் காங்கிரஸ் பக்தராகலாம்; அசோக் மேத்தா நேருவிற்கு பக்கத்தில் மந்திரிப்பதவியில் அமரலாம் என றெல்லாம் அன்று எழுதினர் நமது தேசீயத் தோழர்கள்.

நாகபுரி மாநாட்டிலே பண்டிதரின் புதல்வி பதவி யேற்றதும் இந்திய அரசியல் வானிலே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்றனர். காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டிருந்த பலரை இந்திரா அம்மையார் திரும்ப அழைத்து வருவார் [illegible]ன்று ந[illegible]க்கை யூட்டப்[illegible]டது.

[illegible] ந[illegible]ந்தது என்ன?

நாட்டிலே இருக்கும் எந்தக் கட்சியும் கலைக்கப் படவுமில்லை; காங்கிரஸிலே புதிய புள்ளிகள் எதுவும் சேரவுமில்லை. மாருக காங்கிரஸின் தலைகள் பல தனியாக பிரிந்து சுதந்திராக் கட்சியைத் தோற்றுவித்தனர்!

அதேபோல்பல்வேறு மாகாணங்களில் இருந்த எந்தப் பிரச்சினைகளும் தீர்ந்தபாடில்லை.

ஆயிரமாயிரம் பிணங்கள் விழுந்தாலும் ஒன்ருன பம்பாய் மாநிலத்தை ஒரு நாளும் பிரிக்க மாட்டோம் என்று உரக்கக் கூவிவந்த நேரு பண்டிதரே, "கொஞ்சம் பொறுமையாக இருங்கள் இதோ பிரித்துவிடுகிறேரும்!" என்று கூறுமளவு நிலைமை வளர்த்து விட்டது.

இந்த சூழ்நிலையில் நாகபுரி மாநாட்டில தலைமையேற்ற திருமதி இந்திரா காந்தி, சென்ற வாரம் தன்னுடைய எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியை பஞ்சாப் மாநிலத்தின் புதிய தலைநகரான சந்திகார் அருகில் நிர்மாணிக்கப் பட்ட நவீன் நகரில் கூட்டியிருக்கிருர்.

ஆறு மாதத்திற்கு முன் விடுத்த அன்பழைப்பை வாபஸ்பெற்றுக்கொண்டு, மிக உறுதியோடும், கொஞ்சம் இறுமாப்போடும்கூட, "கொள்கை வேறுபாடு கொண்டு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடக்கமுற்படும் காங்கிரஸ் காரர்கள் தயவு செய்து வெளியேறுங்கள்!" என்று உத்திரவு போட்டிருக்கிருர்,

நாகபுரி அழைப்பிலே இந்திரா காந்தியின் அரசியல் நெறியைக் கண்ட அதே பத்திரிகைக்காரர்கள் இன்று அவர் பேச்சிலே ராஜ தந்திரந்தைக் காண்கின்றனர்!

இப்படி நாகபுரியாளுலும் சரி, நவீன் நகரிலாளுலும் சரி எங்கே, எதைப் பேசிஞலும் அதை புகழ்வதும், அந்தப் புகழ்ச்சியின் மூலமாக மக்களே ஏமாற்றி, லாபந்தேடுவதும் இன்றைய தேசீயத் தோழர்களின் வேலேயாகி விட்டது. ஆனல் இரண்டு சொற்பொழிவுகளுக்கும் இடையே நாட்டிலே நடந்த மாறுதல்களும் அந்த மாற்றங்களின் போது அம்மையாரும் அவர் தலைமை தாங்கும் காஙகிரசும் நடந்துகொண்டவிதமும் நம்மனக்கண் முன் இருந்துகொண்டேதான் இருக்கின்றன.

கொள்கைக்கு விரோதமாக நடக்கிறவர்களே கட்சியை விட்டு வெளியேறச் சொன்னது மாத்திரமின்றி, மாற்றுக் கட்சிகள் கொள்கை எதுவுமின்றி மக்களே குழப்பி வருவதாகவும் கூறியிருக்கிருர், பண்டிதருக்கு அரசியல் வாரசாகவும் ஆக்கப்படும் அம்மையார்.

நவீன் நகரிலே கூடிய காங்கிரஸ் குழுவில் ஏற்பட்டிருக்கும் கொள்கைக் குழப்பத்தை நோக்கும்போது, இந்தக் குற்றச்சாட்டைக் கூற எந்தளவு துணிச்சல் இவருக்கு உண்டு என்றுதான் நமக்குத் தோன்றுகிறது. நவீன் நகரில் எடுக்கப்பட்ட முடிவுகளிலே முக்கியமானது, கேரள அரசியலேப் பற்றியது.

இந்திய அரசியலில் முஸ்லீம்களுக் கென்று தனியானதொரு ஸ்தாபனம் இருப்பது வகுப்புவாதத்தை வளர்ப்பதாகும் என்பதுதான் காங்கிரஸின் தீர்மானமான கொள்கை. கிட்டத்தட்ட பதினெட்டு ஆண்டுகள் இந்தக்

(8-ம் பக்கம் பார்க்க)

நல்லவர்கட்கு நாசூக்காக ஒரு வார்த்தை!

சிறுகதை

ஏழைவீட்டு அழகி!

மாலை நேரம்.

மாலையை வர்ணிக்கும் எத்தனையோ கவிதைகள்—அந்த கவிதைகளில் எத்தனை, எத்தனை கற்பனைகள்! ஒவ்வொரு கவிஞருக்கும் என்ன என்னவேடிக்கையான கற்பனை தோன்றுகிறது. அவைகளெல்லாம் அவர்களின் உள்ளத்தின் உணர்ச்சி அலைகளா? இதயத்தின் சலசலப்புகளா? மாலைநேரத்துச் செம்மையைக் கண்டதும், மேற்குமங்கை நாணமுறுவதாக ஒரு கவிக்குத் தோன்றுகிறது; கதிரவன் அவளை முத்தமிடுவதாக ஒருவன் எழுதிவிட்டுச் சென்றிருக்கிறன். இன்னும் எத்தனை, எத்தனையோ! அத்தகைய மாலைவேளை!

சிங்கார ஆடையை அணிந்து தக, தகக்கும் சென்னை மா நகரம்! அதனின் காலடியை முத்தமிட்டுச் செல்லும் சமுத்திரம்!

சமுத்திரக் கரையிலே, நீண்ட மணற் பரப்பு!

மாலை கதிரவன் ஒளிபட்டு வைரங்களாக மின்னின மணற் துளிகள்!

அந்த மணற் பரப்பில் மனிதப் பூச்சிகள்!

வண்ணாத்திப் பூச்சி போன்ற வர்ணஜாலம் கிரம்பிய வனிதா மணிகள்! அவர்கள் அருகிலே ஆடவர்கள்! அவர்கள் மடியிலே துள்ளிவிளையாடும் கள்ளமில்லா வெள்ளி நிலவுகள்!

ஆயிரம், ஆயிரம் கவலைகள் உள்ளத்தில் கிரந்தரமாக சதிராடிக் கொண்டிருந்தாலும் இத்தகைய காட்சிகளைக் காணும் போது, அவைகளெல்லாம் எங்கேயோ ஆழத்தில் புதையுண்டு போய்விடுகின்றன அல்லவா?

இங்கே நடமாடும் மனித சடலங்களின் வாழ்விலும் எத்தனையோ துயர்கள். தொல்லைகள் அவைகளை காணப்போழுதேனும் மறக்கலாம் என்ற எண்ணத்துடன்தானே கடலரசனின் காலடியை தழுவ வருகின்றனர்!

*

வேர்க்கடலை வேண்டுமென்று அடம் பிடிக்கிறன் ஒரு சிறுவன். ‘வேண்டாமடா, கண்ணு, உடம்புக்கு ஆகாது – வீட்டில் பாதாம் இருக்கிறது தருகிறேன்’ என்கிறள் தாய். அச்சிறுவனுக்கோ, வீட்டிலிருக்கும் பாதாம் பிடிக்கவில்லை; கடலைதான் தேவை அவனுக்கு இப்போது!

*

“உன் பற்களைப்போல் முறுவலிக்கும் முல்லையும், மல்லிகையும்இருக்கும்போது, இந்த மணமில்லா காகிதப் பூ எதற்கு?” என்கிறன் காதலன்.

கடைக் கண்ணால் காதல் ரகசியத்தை சிந்திக் கொண்டே ‘மணமில்லா விட்டாலும், வண்ணமிருக்கிறதே’ என்கிறள் அவனின் இதயத்துக் கிளி!

* * *

காரிருள் மறைகிறது, கடலுக்கடியிலிருந்து நிலவு புறப்படுகிறது.

நித்திலப்பூவின் உதய பவனி விரகதாபத்தால் வேதனைப்படுவோரும், கள்ளக் காதலர்களும், கொள்ளைக் கூட்டத்தினரும் பூர்ண சந்திரனின் பொழிலை வெறுக்கின்றனர்.

இளம் மாதர்களும், அவர்களின் மடியிலே சாய்ந்து நிலவிற்கும் மாது சிரோன்மணியின் முகத்திற்கும்உள்ள ஒற்றுமையை நினைத்து, நினைத்துப் பூரிக்கும் சுந்தர புருஷர்களும் நிலவை விரும்புகின்றனர். மனிதர்களுடையஉள்ளத்தின் விருப்பம் தான் என்ன? இடத்திற்கு தகுந்தாற்போல் நிறம் மாற்றிக்கொள்ளும் ‘பச்சோந்தி’ மனம் படைத்தவர்கள்தானு மனிதர்கள்!

அல்லது சூழ்நிலையும், காலமும் இணைந்துஇதயத்தின் எண்ணங்களை உருட்டுகின்றதா?

*

உலகமே விசித்திரமானது; அதில் நடமாடும் மனித சடலங்களின் உள்ளம் அதைவிட விசித்திரமானது. அந்த உள்ளத்திலே எழும் ஆசை அலைகள், எண்ணக் குவியல்கள் எல்லாவற்றையும்விட விசித்திரமானது.

முல்லை-சத்தி

அதோ,
அவர்கள்,
ஆணும், பெண்ணும்,
புருஷனும், மனைவியும்,
அழகும், அவலட்க்ஷணமும்.
முள்ளும், மலரும்,
சேறும், செந்தாமரையும்,
நத்தையும், முத்தும்,
அம்மாவாசையும், பௌர்ணமியும், சங்கமாகியிருக்கிறதே!

*

சே, இதென்னடா, ‘காம்பினேஷன்’ – அவலட்க்ஷணத்திற்கு அப்சரசா?’ கல்லூரி மாணவனின், வயிற்றெரிச்சலோடு கலந்து வந்த விமர்சனம்.

*

‘கிளியை வளர்த்து பூனையிடம் கொடுத்திருக்கிருர்களே, பாவிகள்’’ வயது முதிர்ந்தவரின் அனுபவ முத்திரை.

*

“இவனை மணந்துக்கொண்டதிற்கு பதில், குளம், குட்டையிலே விழுந்திருக்கலாமே? ஒரு முழக்கயிறுக்கூடவா கிடைக்கவில்லை’’ சீர்த்திருத்தக்காரியின் சீற்றச் சொற்கள்!

*

என்ன துணிச்சலைய்யா அவனுக்கு இந்த சித்திர பேரழகியை மணந்துக்கொள்ள?

*

அவலக்ஷணமாக இருந்தாலும் அதிர்ஷ்டக்காரனடா அவன். நமக்கு இந்த அதிர்ஷ்டம்கிடைக்கக் கூடாதா?

*

பெற்றவர்கள்தான் கல்மனம் படைத்தவர்களென்ருல், இவளின் இதயமும் கற்பாறையா?

*

எப்படி ஒப்பினுள் அவனை மணக்க இந்த மாது?

*

“கோரம்! காணவே கண் கூசுகிறதே – இவள் எப்படி அவனுடன் வாழ்கிருள்!’’

*

“காலன் கொடுமைக்காரன் – இக் கட்டழகியை, கோர சொருபத்துடன் சேர்த்துவிட்டானே, பாவி!’’

*

“முடவனுக்கு கொம்புத் தேன்!’’

*

“விழியற்றவன் கையிலே வெள்ளி நிலவு!’’

*

அவள்! தேடக்கிடைக்கா தங்கம் – வாடாமலர் – ஆடிவரும் விளக்கு – பாடிவரும் பொன்வண்டு!

அவள்,
அழகி, பேரழகி!
‘அழகு’ என்ற மூன்றெழுத்துக்களின் மொத்த உரு!

சுருங்கச் சொன்னல், அவள் சௌந்தரிய தேவதை! அவளுக்கு வாய்த்தவன் – வடிவழகனல்ல; அவலட்க்ஷணத்தின் முழு உரு!

எப்படி ஏற்பட்டது இந்த சேர்க்கை!

*

பொற் கொடிகளின் கார் கூந்தலை அலங்கரிக்க சேற்றிலே பிறந்த செந்தாமரை எருமையின் காலடியில் மிதிப்படுகிறதே!

*

பத்தரைமாற்று மேனியாளின் கழுத்திலே தவழ, கத்தும் கடலிலே பிறந்த முத்து, மந்தியின் கையில் சிக்கிவிட்டதே!

*

அழகு, அழகு என்றலைபவர்கள் கையில் அவலட்க்ஷணத்தை

(6–ம் பக்கம் பார்க்க)

சென்னை மாவட்ட
தி. மு. க. 3–வது மாநாடு
அக்டோபர் 17, 18 சனி, ஞாயிறு
எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்
★
தலைவர்:
டி. கே. சீனிவாசன்
திறப்பாளர்:
இராம. அரங்கண்ணல்
அறிஞர் அண்ணு, பொதுச்செயலாளர்,
மற்றும் கழக முன்னணியினர் அளிக்கும்
அரசியல் கருத்துக்கள்
சிதம்பரம். செயராமன், நாகூர். அனிபா,
அளிக்கும் இசையமுது
கலைஞர் மு. கருணநிதி 17–ந்தேதி நடக்கும்
இலட்சியநடிகர் இராசேந்திரன் 18-ந் தேதி நடக்கும்
நாடக விருந்து
திராவிடப் பெருங்குடி மக்களே!
விரைந்து வாரீர் விடுதலை முழக்கமிட !!
கோ, செங்குட்டுவன், வரவேற்புக் குழு தலைவர்.
அ. பொ. அரசு, பொருளாளர்.
கே. எம். கண்ணபிரான்,
வி. இளஞ்சேரலாதன், செயலாளர்கள்.
தி. சு, நல்லதம்பி, தொண்டர்படை தலைவர்.



மலர் 1] [இதழ் 38

நீறு பூத்த நெருப்பு!

‘மணிமுடி தரித்து, அணி பல பூண்டு, செங்கோல் ஏந்தி, பொங்கும் கடலைப்போல், சிங்கநடை நடந்து, செகமெங்கும், செங்கதிர்போல். புகழ் ஒளிவீச, ஆண்ட இனம், இன்று டில்லி பேரரசின்பிடியில். சிக்கி சீரழிகிறது—அன்னையின் கரங்களிலே பூட்டப்பட்டுள்ள அடிமை விலங்கொடிக்க வாரீர்’. தென்னகத்தின் பழம்பெறும் பெருமைகளை நிலைநாட்ட காணிக்கைத்தாரீர், என்று நாம், இனத்தைக்காட்டி, இனத்தின் பண்டைய சரித்திரத்தைப் புரட்டி, கலை, கலாச்சார பெருமைகளைத்திரட்டி. திமிர் பிடித்த டில்லி ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து நமது தாயகத்தை - திருவிடத்தை - தென்னகத்தை மீட்க, விடுதலை போர்முரசு கொட்ட, வாரீர் என்றெல்லாம் நாம் அன்பழைப்பு விடுக்கின்ற நேரங்களில் ஆந்திரத்திலே எங்கே உங்கள் பவனி? கர்நாடகத்திற்கு உங்கள் குரல் கேட்கிறதா? என்றெல்லாம் சில வக்ரபுத்திக்காரர்கள் உக்கிரமமாகமேடை அதிர முழங்குகின்றார்கள்; அவர்களுக்கு நாம் பலமுறை விடை அளித்திருக்கின்றோமென்றாலும், அண்மையில், ஆந்திர முதலமைச்சர், சஞ்சீவி (ரெட்டி) சென்னையில் சிந்திய சிலசொற்களை அவர்கள் முன் சமர்பிக்கிறோம்; மந்த புத்திக்காரர்கள் தெளிவடைய, ஏக இந்திய மாயையில் மயங்கி இருப்போரின் சிந்தை ஒளிப்பெற.

“தென் இந்தியாவின் [illegible]ம், மரியாதையும் காப்பாற்றப்பட வேண்டுமானால், தென்னிந்திய ராஜ்யங்களான, சென்னை, ஆந்திரம், மைசூர், கேரளம், ஆகிய நான்கு ராஜ்ஜியங்களும் கை கோர்த்து பணிப்புரிய வேண்டும். தென்னிந்தியத் தலைவர்கள் அடிக்கடிசந்தித்து, பொதுப்பிரச்சனைகளை ஆராய்ந்து முடிவுக்கு வந்தால்தான், டில்லி பேரரசுடன் அதற்காக போராடமுடியும்”

“நாம் தென் கோடியிலிருக்கிறோம்; டில்லி இங்கிருந்து ரொம்ப தூரத்திலிருப்பதால், நாம் கத்துவது அவர்கள் காதில் விழுவதில்லை”

“நாட்டின் இதர பாகங்களில் அனுஷ்டிக்கப்படும் ஒரு முறையை இங்கு மட்டும் ஏன் கையாளக்கூடாது?”

இந்த மணி, மணியான வாசகங்களை உதிர்த்தவர்கள் உதிரத்தை சிந்தியேனும், புதிய சாம்ராஜ்ஜியத்தை தென்னகத்தில் அமைப்போம் என அல்லும் பகலும் அனவரதமும் அயராது, துயரைக்கண்டு துவளாது, புயலைப்போல் பணிப்புரிந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாசறையைச் சேர்ந்த போர்வீரனல்ல! கல்லூரி நாட்தொட்டு கதர் அணிந்து, காந்தியாரின் நாமத்தை ஜெபித்துக் கொண்டு, ஆந்திர ராஜ்ஜியத்தின் முதல் மந்திரியாக வீற்றிருக்கும் சஞ்சீவியாரின் முத்துக்கள்! பழம்பெரும் காங்கிரஸ்வாதி! அகில இந்திய மாயை அவர் உள்ளத்திலேயிருந்து தேய்கிறது. தேசிய உணர்ச்சி உதயமாகிறது.

மாற்றுந்தாய்ப் போக்கில் டில்லி பேரரசு நடந்துக் கொள்ளுகிறது தென்னகத்திடம் என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்; அதோடு நின்றுவிடவில்லை; நாட்டின் பல்வேறுபாகங்களில் கடைப்பிடிக்கும் ஒரு முறையை இங்கு மட்டும் கையாள மறுப்பதின் மர்மம் என்ன என்ற வினாவையும் தொடுத்துள்ளார்; அதற்குப் பரிகாரம் தென்னக ராஜ்யங்கள் ஒன்று திரண்டு கைகோர்த்துப் போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்! இன்னும் அவரின் உடலை கதர் மறைத்துக்கொண்டிருப்பதாலும், உள்ளத்திலே காங்கிரஸ் குடியேறியிருப்பதாலும், இதோடு நிறுத்திவிட்டார்; இல்லையென்றால் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று அவர் வாய் ஜெபித்திருக்கும்!

தென்னகத்தின் நான்கு ராஜ்யங்களையும் இணைத்து ஒரே உணவு மண்டலமாக்கியிருக்கிறது டில்லி பேரரசு! அதைப் பிரிக்க வேண்டுமென்று சென்னைசர்க்காரும், ஆந்திர சர்க்காரும் வேண்டியும் அவர்களது வேண்டுகோளை நிராகரித்து விட்டார்கள் டில்லி தேவதைகள்! ஆனால், ஒரே மண்டலமாக இருந்த ராஜஸ்தான், மத்திய பிரதேசம், பம்பாய் ஆகிய ராஜ்யங்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு விட்டன; ஆனால் தென்னகத்தில் ஆந்திரமும், சென்னையும் மண்டல இணைப்பிலிருந்து விலகிக்கொள்ள விரும்பியும், வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது நேரு துரைத்தனத்தால்!

ராஜஸ்தானுக்கும், மத்திய பிரதேசத்திற்கும், பம்பாய்க்கும் அளிக்கப்பட்டுள்ள சலுகையை ஆந்திரத்திற்கும், சென்னைக்கும் அளிக்க மறுப்பதேன்? இந்தச் சாதாரண கோரிக்கையை நிறைவேற்றக்கூட வரம் அளிக்க மனமில்லாத டில்லி தேவதைகள் தென்னக மக்களின் வாழ்வு வளம்பெற வழிவகைச் செய்வார்களென்று நாம் எப்படி எதிர்ப்பார்ப்பது? இந்த நாட்டின் லகானை பிடித்திருக்கும் இந்திய பேரரசு, தென்னகத்தின் நலனில்நாட்டம் செலுத்துவதில்லை; அதோடு மட்டுமல்ல. திராவிடத்தின் சுகத்தைசூறையாடுகிறது என்று நாம் ஆதாரத்தை அள்ளித்தெளித்து, திராவிடம் தனியாகப் பிரியவேண்டும் என்று நாம் கூறும்போதெல்லாம், நையாண்டிச் செய்யும் ‘சிலதுகள்’ இதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்கேயோ இருப்பவர்களுக்கு—இனத்தால்—மொழியால் பழக்கவழக்கத்தால் கலையால்—வேறுபட்டிருப்பவர்கள் நம்மீது ‘அக்கரை’ செலுத்த கவனம் செலுத்துவதில்லை என்பதற்கு வேறு ஆதாரம் தேவைதானா?

உணவு மண்டலத்திலிருந்து தனித்தனியே பிரிந்தால் நாட்டை வாட்டும் உணவு பிரச்சனைக்கு ஒரு முடிவேற்படும் அதுதான் மற்ற ராஜ்யங்களின் நடைமுறையும் காட்டுகிறது. அதைச் செய்ய - பட்டினியால் வாடும் தென்னக மக்களின் வயிறு நிரம்ப தேடும் பரிகாரத்திற்கும் தடை விதிக்கிறது இந்திய அரசு!

இதைக்கண்டுதான் சீறியிருக்கிறார் சஞ்சீவியார்! ‘ஏன் இந்த ஓரவஞ்சனை’ என்ற வினாவையும் தொடுத்துள்ளார்! ‘டில்லி வெகு தூரத்திலிருப்பதால் நாம்கூறுவது அவர்களின் காதில் விழுவதில்லை; நாம் இணைந்து உரத்தக் குரலில் கூறினால் அவர்களின் உறக்கத்தைக் கலைக்கலாம’ என்று ஒரு பரிகாரத்தையும் கூறியிருக்கிறார். அது ஒரு தற்காலிக பரிகாரமாக இருககலாமே தவிர நிரந்தரமான பரிகாரமாயிருக்க முடியாது! அருகிலே அமைச்சர் காமராஜர் எதிரிலே அசோக சக்கரம் - உடலிலே கதராடை - உள்ளத்திலே காங்கிரஸ் வாடை, என்றாலும் உள்ளத்தின் உணர்ச்சிகளை அவரால் அடக்க முடியவில்லை; அந்த உணர்ச்சி வார்த்தைகளாக வெடித்து சிதறி யிருக்கின்றன; வேண்டுமென்றால் உள்ளத்தின் எண்ண அலைகளை இதயத்திலே அடக்கி சிலவற்றை மட்டும்வெளிப்படுத்தியிருக்கின்றார்என்று கூறலாம். கட்சிகட்டுப்பாடு அவரின் உணர்ச்சிகளுக்கு வேலி போட்டுவிட்டது.

‘ஏன் இந்த வஞ்சனை’ என குமுறுகிறார் ‘போராட வேண்டும்’ என்று கனல் கக்குகிறார்!

இது எதை காட்டுகிறது? ஆந்திரத்தில் விடுதலை முரசுகொட்டும்நாள் வெகுதூரத்தில்இல்லைஎன்பதைத்தானே!

அடிக்க, அடிக்க, உயரஎழும் பந்தைப்போல் ஆந்திர மக்களின் வயிற்றில் டில்லி அரசாங்கம் அடிக்க, அடிக்க, விடுதலை உணர்ச்சி பீறிட்டுக் கிளம்பும் என்பதன் காலக்குறிதான் சஞ்சீவியாரின் இதயக் குமுறல்!

குமுறும் எரிமலை என்றாவது ஒரு நாள் வெடித்தே தீரும். கொந்தளிக்கும் கடல், பிரளயமாக மாறியேத்தீரும்!

‘திராவிட நாடு திராவிடருக்கே; என்ற விடுதலைப் பண்ணை நாம் பாடும்போதெல்லாம் கேலியும், கிண்டலும் செய்வோருக்கும் சீறிபாய்வோருக்கும் கடுச்சொற்வீசுவோருக்கும் அன்று அனுமன் கொண்டுவந்த சஞ்சீவிமலை போல் இன்று இந்த ‘சஞ்சீவி’ வந்திருக்கிறது; அவர்களின்மாயையை போக்க, கண்ணை மறைக்கும் திரையை கிழிக்க!

தேசீய உணர்ச்சிஎன்பதுநீறுப்புத்த நெருப்பு! அது என்றாவதுஒருநாள் கனலை வீசத்தான் செய்யும்; அதைத்தான் சஞ்சீவியாரின் சொற்கள் நமக்கு காட்டுகிறது!

ஆந்திரத்தில் விடுதலை வெள்ளி தோன்றுகிறது! அந்துசெங்கதிரவன் உதயமாகும் காலம் அதிகமில்லை,

★

காபூல் முதல் லெனின்கிராடு வரை

ஈ.வி.கே.சம்பத்

13

லெனின்கிராடு வாசிகளுக்கு தமது ஊர் நாடகக் குழுவினரிடமும், 'பேலே' நடனக் குழுவினரிடமும், சர்க்கஸ் குழுவினரிடமும் உள்ள ஆசையும், மதிப்பும் சொல்லி முடியாது. சோவியத் யூனியனிலேயே மேற்குறிப்பிட்டக் கலைகளில் வல்ல மிகச் சிறந்த கலைஞர்கள் தமது ஊரில் தான் உள்ளனரென அவர்கள் எவரிடமும் அழுத்தந்திருத்தமாக அறுதியிட்டுக் கூறி மகிழ்வர். "நீங்கள் மாஸ்கோவில் 'பேலே' பார்த்தீர்களா? இங்கும் பாருங்கள். பிறகு உங்களுக்கே தெரியும், எங்களூர் 'பேலே' குழு மாஸ்கோக் குழுவினைக் காட்டிலும் எவ்வளவு உயர்ந்தது என" என்று அவர்கள் கூறும்போது அவர்கள் பேச்சில் ததும்பும் உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே! இது மட்டுமின்றி தங்கள் ஊரில் அவ்வப்போது வளரும் தலை சிறந்த கலைஞர்களை மாஸ்கோ நகருக்கு 'அடித்து'க்கொண்டு போய்விடுகிறார்கள் என்றும் குறைப்பட்டுக் கொள்வார்கள். இப்படிப்பட்ட உரையாடல் நிகழும்போது மாஸ்கோவிலிருந்து எங்களுடன் வந்திருந்த உடன் உரை பெயர்ப்பாளர் வேலண்டினா பலமாக மறுப்புகள் கூறி, மாஸ்கோவின் சிறப்புகளை எடுத்துரைத்துப் பலத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டு விடுவார். இந்த மாஸ்கோ, லெனின் கிராடு போட்டா போட்டி வாக்குவாதங்கள் எப்போதுமே மிகவும் சுவையாக இருக்கும். மாஸ்கோ நகரத்தினரும் லெனின் கிராட் சென்று மாஸ்கோ திரும்புவோரிடம், "உங்களுக்கு லெனின் கிராட் பிடித்திருந்ததா? மாஸ்கோவை விடவா?" என்று கேட்கத் தொடங்கிவிடுவர் லெனின் கிராடைப் பற்றிப் புகழ்ந்துரைத்தால், "அது சரி. லெனின் கிராடு பருவ நிலை பிரமாதமாக இருந்திருக்குமே" எனக் குறும்பாகக் கேட்பார்கள். ஏனெனில் லெனின் கிராடு நகரின் எழிலனைத்திற்கும் எதிராக அந்நகரின் பருவநிலை தொல்லை மிகத் தரும் ஒன்றாகவே எப்பொழுதும் அமைந்திருக்கும். ஆனால் எங்களைப் பொறுத்தவரை பருவ நிலையும், லெனின் கிராட் மக்களே நம்பமுடியாதபடி அவ்வளவு சுகமாக அமைந்து நாங்கள் அங்கு கழித்த நாட்களை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக்கியது. இதனை மாஸ்கோ திரும்பியதும் அந்நகரில் சந்தித்த இரினி என்னும் ஓர் அனுபவம் மிக்க அரசியல் வட்டாரத்து உடனுரைப் பெயர்ப்பாளரிடம் கூறியபோது அவரடைந்த 'ஏமாற்றத்துக்கு' ஓர் அளவேயில்லை. "என்ன ஐந்து நாட்களுமே பருவநிலை நன்றாக இருந்தது என்று கூறுகிறீர்கள். இல்லை நீங்கள் வேடிக்கை செய்கிறீர்கள். ஒன்று நீங்கள் லெனின் கிராடுக்குப் போகவில்லை என்று பொருள் அல்லது நீங்கள் லெனின் கிராடு என்று போய் பார்த்த ஊர் லெனின் கிராடாக இருக்க முடியாது. வேறு ஏதோ ஊராய் இருக்கும்" என்று சாதிக்கத் தொடங்கிவிட்டார். ஆனால் இப்பலத்த போட்டியில் எப்பொழுதும் எவர் முன்னிலையிலும் மாஸ்கோ தோற்று விடும். லெனின் கிராடைக் காணும் வெளி நாட்டினர் மட்டுமன்றி சோவியத் யூனியனில் உள்ள மற்ற பகுதியினரும் தமதுள்ளத்தை உடனே பறி கொடுத்துவிடுவர். மாஸ்கோ நகரத்தினர்கூட போட்டியொரு பக்கமிருந்தாலும், லெனின் கிராடு நகரத்தின் எழிலைப்பருகி அதனை வெகு இரகசியமாக இரசிப்பதில் அவர்களுக்கிணை வேறு யாருமில்லை என்றே கூறலாம்.

லெனின்கிராட் நகரில் உள்ள 'மெட்ரோ' என்றழைக்கப்படும் சுரங்க இரயில்ப்பாதை நிலையங்கள் மாஸ்கோநகரில் உள்ளவைக் கிணையான அழகு வாய்ந்தவை. ஒவ்வொரு நிலையமும் ஒவ்வொரு வகையில் பல்ரகப் பளிங்குக் கற்களைக் கொண்டு எழில் ததும்ப அமைக்கப்பட்டுள்ளன. நிலையத்தின் மேற்கூரைகளில் சோவியத் யூனியனின் தலைசிறந்த ஓவியர்கள் புரட்சியின் வரலாற்று நிகழ்ச்சிகளை அழகாகத் தீட்டியுள்ளனர். ஒவ்வொரு நிலையத்திலும் சரவிளக்கு அலங்காரங்கள் கண்ணைப் பறிக்கும் நிலத்தைக் குடைந்து போடப்பட்டுள்ளக் குழாய் இரயில்களும் இரயில் நிலையங்களும், இரயிலியக்கத்தின் திறமும் வசதியும், சோவியத் யூனியனில் உள்ளது போல் உலகில் வேறெங்கும் இல்லை என்பது உலகம் ஒப்புக்கொண்ட ஒரு உண்மையாகும். லெனின்கிராட் நகரிலும் சுரங்க இரயில் வசதியோடுகூட, மின்சார ட்ராலிபஸ்களும் வாடகைக் கார்களும் மக்களின் போக்குவரத்துச்சாதனங்களாக விளங்குகின்றன. நமது பெரு நகரங்களில் [illegible]ணப்படுவது போன்று அந்நகர்களின் பா[illegible]கட் தொகைக்கும் [illegible]ளவு சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும், ஸ்கூட்டர்களையும் அதிகம் காணக் கூடவில்லை. இவைகள் அனைத்தும் சோவியத்யூனியனில் உற்பத்திசெய்யப்படுகின்றன எனினும் அங்கு மக்கள் உபயோகத்தில் அதிகம் தட்டுப்படவில்லை.

லெனின் கிராடு நகரின் புகழ் வாய்ந்த 'பேலே' நடனமொன்றைக் கண்டோம். அக்கலை ஐரோப்பா முழுமையும், பரவியுள்ள ஒன்றாயினும் நெடுநாட்களாகவே இரஷ்யர்கள் அக்கலையில் தாங்கள் தலைசிறந்தவர்கள் என்பதை நிலைநாட்டி வந்திருக்கின்றனர். குருஷ்சேவ்வை உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு வரவேற்ற, நியூயார்க் நகரவாசிகள், சோவியத் 'பேலே' குழுவினரிடம் தமதுள்ளங்களைப் பறி கொடுத்து விட்டுத் தவித்தனர் என்று செய்தி கேள்விப்படுகிறோம். சட்டதிட்டக் கண்டிப்புகளிலும், நுணுக்கங்களிலும் நமது பரதத்திற்கிணையாக அந்நடன வகை விளங்குகிறது. மேடையில் ஆடும் கூட்டத்தில் ஒருவராய்த் தோன்றுவதற்கு முன் பல ஆண்டுகள் தொடர்ந்து பயிற்சிபெற்றவராய் இருக்க வேண்டுமெனக்

நவீன் நகரில்...!

★

சென்ற வாரம் நவீன் நகரில் நடந்த அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே இந்திய–சீன எல்லைத் தகராறு பற்றி நெரு மணிக்கணக்காக பேசினாராம். காங்கிரசின் முன்னாள் தலைவர் தேபர், திட்டப் பட்டுவரும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அரைநாள் விவாதித்தாராம். தலைமைவகித்த இந்திரா காந்தி கேரள – பம்பாய் பிரச்னைகளை அலசித் தீர்த்தாராம். ஆனால் இவ்வளவு முக்கிய பிரச்னைகளை விவாதித்த அந்தக் கூட்டத்திற்கு வந்தது, 625 உறுப்பினர்களில் 172 பேர்தான். அதுவும், வந்ததில் பெரும்பாலோர் சிலமணி நேரங்கள் கூட சேர்ந்தார்போல் கூட்டத்திற்கு வர முடியாமல் பிரயாண அலுப்பில் தங்கள் தங்கள் ஹோட்டல் அறைகளிலேயே இருந்துவிட்டனராம்!

ஆகவே பேசிய பெருந்தலைவர்கள் அத்தனை பேரும் கூச்சல் போட்டு பந்தலுக்குள் விளையாடிக் கொண்டிருந்த பள்ளிக் குழந்தைகளைப் பார்த்தே பேசிக்கொண்டிருந்தனராம்! இந்தக் குழந்தைகள் அதிகம் கூச்சலிடாமல் பார்த்துக் கொள்வது பெரியவேலையாக இருந்தது என்கிறார் டில்லி பத்திரிகை நிருபா ஒருவர்!

அக்டோபர் 16வ இதழில்

K.A. மதியழகன்

தீட்டும்

★

கொங்கு நாட்டு தீரன்சின்னமலை

வசீகரத் தொடர்கதை ஆரம்பமாகிறது

★

வண்ணச் சுவரொட்டிகள் தயாராகின்றன

விற்பனையாளர்களுக்கு விரைவில் அனுப்பப்படும்

விவரங்கட்கு:

"தென்னகம்"

சென்னை-6.

கூறப் பட்டது. நமது நடன அரங்குகளில் ஆடும் பெண்களைப் பற்றிய விளம்பரங்களில், அவர்கள் இன்னாரிடம் பயிற்சி பெற்றவர் என விளம்பரப் படுத்தப் படுகிறது. பெரும்பாலும் நடனங்களைப் பார்ப்பவர்கள், சிட்சை இன்னாரிடம் என விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் ஆடும் பெண்மணி அரிசி எந்தக் கடையில் வாங்குகிறார் என்பதைச் சொல்லவில்லையே என ஏங்கும் வண்ணம், ஆடுபவர்களின் புகழ் ஓங்க ஓங்க அவர்களது உடல் பெருத்து தாளக் கட்டுகளுக்கும், இசைக்கும் அடங்காமலும், இணையாமலும் தன்னிச்சையாக ஆடும தசைத் தொகுப்புகள் விளங்குகின்றன. ஆனால் பேலே நடனக்குழுவில் உள்ளவர்களுக்குப் பயிற்சியை விட, உடல்பெருக்காமல் உரிய அளவிலேயே வைத்திருக்கும் கட்டுப்பாடு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. 'பேலே' என்பது நடனம் என்பதைவிட நடன நாடகம் என்பது பொருந்தும். ஒரு கதையினைத் தேர்ந்தெடுத்து, தனியாக அதற்கு இசையமைத்து பல மாதங்கள் பயின்று பின்னர் அதனை அரங்கேற்றுகின்றனர். பல ஆண்டுகள் அது நடத்தப்படுகிறது. பெரும்பாலும் சம்பவங்களைவிட உணர்ச்சியின் விரிவுகளைச் சித்தரிக்கும் கதைகளையே தேர்ந்தெடுக்கின்றனர் நடனநாடகம்சாதாரணமாக இரண்டரை மணி நேரம் நடைபெறுகிறது. இடைவேளை அரைமணிநேரம். வெறும் கருவியிசையும். நடனபாவமும் மட்டும் கொண்டு இரண்டரை மணி நேரம் ஒரு கதையினை நடித்துக் காட்டுவதென்றால் அது சாமான்யமானதல்ல. ஒரு நாடகத்தில் எல்லாச் சுவைகளும் உண் அதே போல் பேலே நடனம் காணும்போது, காண்பவர்கள் கண்ணீர்விடும் கட்டங்களும், கொட்டகையே அதிரும் வண்ணம் கையொலி எழுப்பும் கட்டங்களும், சிரிப்புகள் வெடிக்கும் கட்டங்களும் நிறைய இருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் பேலே கதைகள் சோகமுடிவு கொண்டவை'யாகவேதான் அமைகின்றன. நாங்கள் பார்த்த கதை, வேட்டைக்கு வந்த இளவரசன் ஒருவனைக் காதலித்த காட்டில் குடியிருந்த ஏழைப் பெண்ணொருத்தி, அந்தஸ்து பேதத்தால் காதல் கைகூடாமல் நீவா ஆற்றுவெள்ளத்தில் உயிர் துறக்க, அது கேட்ட இளவரசன் சித்தப்பிரமை பிடித்து நீவா ஆற்றங்கரையில் கல்லாய்ச் சமைந்து விட்டதைக்கூறும் கதை—நாடகங்களில் உரையாடலும் நடிப்பும் நமக்குக் கதை சொல்கின்றன. ஆனால் பேலேயில், கருவி இசையும், நடனமும் நமக்குக் கதை சொல்கின்றன. உரையாடல் கிளப்பும் உணர்ச்சிகளைவிட இசையொலியும், உடலசைவும் இணைந்து உண்டாக்கும் உணர்ச்சியின் வகைகள் சொல்லுந்தரமன்று. எவரும் தயவு செய்து இந்த நடனத்தை ஓரியண்டல் நடனம் என்னும் பெயரில் நம் நாட்டில் செலவாணியாகிவரும் கோரமான நடனவகையோடு குழப்பிக் கொள்ள வேண்டாம். ஓரியண்டல் நடனத்தில் கொச்சை உரையாடல் பாட்டாக உருவெடுத்து அலறுகிறது. பாட்டுக்கேற்ப ஆடும்'சகோதரிகளோ' அல்லது கூந்தல் குறைந்த இடை வெட்டித் தோள் குலுக்கும 'ஆண்' பாகங்களோ ஆவது உறுதியாக நடனமாகாது. பரதமும் நடனமும், பேலேயும் நடனம் கூட்டச் சேட்டைகளும் நடனம் என்பது மொழிக்குத் திராப் ப யினைக் கொண்டுவந்து சேர்க்கும்: ஓரியண்டல் நடனத்தை நடனம் என்பதைவிட, ஊமையொருவன் தனது எண்ணங்களை வெளியிடத் திணறும் முயற்சி என்பதே பொருந்தும். பேலே நடனம் நிகழும் மேடைக்கு முன்புறமுள்ள பள்ளமான ஒரு அமைப்பில் எண்பத்திரெண்டு கருவி இசையினர் அமர்ந்திருப்பதைப் பார்த்து வியந்தேன். இசை இயக்குனர் எழுபதாண்டை எட்டிப் பிடிப்பவராகக் காணப்பட்டார். நிகழ்ச்சி ஆரம்பமாகும் தருணத்தில் குழுவினர் அமர்ந்திருந்த பள்ளத்தின் மேடை முனைப்பில் அவரது தலை தெரிந்ததுதான் தாமதம், கொட்டகையில் கூடியிருந்தோர் அனைவரும் கையொலி செய்து அவரை வரவேற்றனர். அவரும் அவையினரை வணங்கிவிட்டு தனது கையில் பிடித்திருந்த சிறிய சன்னப் பிரம்பை அசைக்கத் தொடங்கினர். அந்த மந்திரப் பிரம்பிலிருந்து அற்புத இசை பொழிவது போன்ற உணர்ச்சி நிலவியது. அவரது பார்வை சபையை நோக்கி யிருந்தது. கதை தொடங்கியது, நாங்கள் எங்களை மறந்தோம். கதை எங்களை 20-ம் நூற்றுண்டின் லெனின்கிராடிலிருந்து பீட்டர் மாமன்னனுக்கும் முன் காலத்து செயிண்ட். பீடர்ஸ் ப க்குக்கு ...ன்கிராடுக்கு) ராக்கட் வேகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தது. கதையில் மற்றொரு சிறப்பு, கதையில் வரும் பாத்திரங்கள் உடலிறுக்கும் ஆடைகளையே பெரிதும் அணிந்திருப்பினும், ஆபாசஉணர்வுகளுக்குச் சிறிதும் இடம் தராத வகையில் நடனம் அமைந்திருந்தது. கிராமீயவெகுளித்தனத்தையும், விஷயம் முற்றும்போது ஏற்பாடு முகம் புதைக்கும் நாணத்தையும கதாநாயகி சித்தரித்த திறமை வியந்து பாராட்டுதற்குரியது. அந்த வழிதப்பிவந்த ஆணழகன் அரசிளங் குமரன் என்பதை உணராது, இதயத்தைப் பறிகொடுத்துவிட்டு, அவனைத்தேடி வந்த பரிவாரங்களையும் அதில் வந்த அவனுக்கு இராஜரீக்த் தர்பார் நிச்சயித்திருந்த முறைப் பெண்ணையும் கண்டு அதிர்ச்சியுற்று விளக்கம் பெறவோ, வரம் கேட்கவோ தனிமை அகப்படாமல் தவிப்பதையும், இசையும் நடனமும் சித்தரித்த அழகே ஒரு தனி அழகு. காட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் பிரமிப்பூட்டுவையாகவே விளங்கின. நீவா நதியின் வெள்ளப் பெருக்கைக் காட்டியபோது, கொட்டகையில் அமர்ந்திருப்பவர்களுக்கே தாம் வெள்ளத்தில்அடித்துக்கொண்டு போவது போன்ற உணர்வு ஏற்பட்டதென்றால் அது மிகையாகாது. நிகழ்ச்சி முடிந்ததும் பத்துப் பதினைந்து நிமிஷங்கள்வரை நிகழ்ச்சியில் பங்கேற்ற முக்கிய நட்சத்திரங்களைக் கைதட்டி ஆரவாரம் செய்து வரவழைத்து மகிழ்வதில் கொட்டகையில் இருந்த அனைவருமே பேரார்வம் காட்டினர். ஏராளமான பூ முடிப்புகள் மேடைமீது வீசப்பட்டன. பெரும் பூச் செண்டுகளை அருகில் சென்றும் பலர் வழங்கினர். பேலே காட்சி ஒன்று மட்டுமே பார்க்க முடிந்ததே என்பதில் எனக்கொரு குறை.

[தொடரும்]



லெனின்கிராட் செயின்ட் பீட்டர்ஸ் சர்ச்வாயிலில் தோழர் சம்பத்

பெரிய அளவுதான் !

★

இந்தி மொழிக்கு ஆதிக்க மேற்படுவது தவறு என்று வாதிட்ட டாக்டர். சுப்பராயனை வாயடைக்க வழி தேடி, அவரை அமைச்சரவைக்கு அழைத்துச் சென்றனர் டெல்லித் தலைவர்கள்;

டாக்டர் சுப்பராயன் மந்திரி சுப்பராயனாக கோவை வந்தார். பதவியேற்றபின் பொறுப்போடு பேச வேண்டாமா? ஆகவே, நாட்டுப் பிரிவினை ஆகாது என்று நம்மைச்சாடினார். அது பதவியளித்தவர்களுக்குக் காட்டும் நன்றி என்று நாம் ஒதுக்கித் தள்ளினோம்.

சென்னை வந்தார், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தென்னாடு புறக்கணிக்கப்படாது, கணிசமான அளவுக்கு பணம் ஒதுக்கப்படுல் என்ருர்.

இதைக்கேட்ட நமக்கெல்லாம் மகிழ்ச்சி. மூன்ருவது திட்டத்தின் முதலீடு பத்தாயிரம் கோடி ரூபாய்களாயிற்றே !

ஆனால் இங்கிதம் தெரியாத இந்த சர்க்கார் அவர் பேசிய இரண்டு நாட்களில் சென்னை மாநிலத்தில் மூன்ருவது திட்ட முதலீடு முந்நூறு கோடி ரூபாய் என்று கூறியிருக்கிறது.

பத்தாயிரம் கோடியில் முந்நூறு கோடி பெரிய அளவுதான் !

பாவம்! மந்திரியார் இது தெரிந்திருந்தால்இந்த அளவு துணிந்து நம்மையெல்லாம் ஏமாற்றி இருக்க மாட்டார் !

திருத்தம்

சென்ற 2-10-59 இதழ் 'காபூல்முதல் லெனின் கிராடு' என்ற தொடர் கட்டுரையில் 1314க்கு முன்பு இதே நகரம் ''ஸெயின்ட் பீட்டர்ஸ் பர்க்'' என அழைக்கப்பட்டது என்பதை '1914' என்றுவாசிக்கவும்.

ஏழைவீட்டு அழகி...!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யும், அவலட்க்ஷணத்திடம் அழகு தேவதையையும் சேர்த்து விடுவதுதான் இயற்கை அன்னையின் விளையாட்டா?

* * *

இது விளையாட்டல்ல; ஊழிக் கூத்து!

* * *

அவள்!

அந்த அழகி பிறந்தது, மாளிகையிலே அல்ல, மண் குடிசையில்! அவள் அழகிதான்; ஆனால் அந்தஸ்தில்லை!

அழகிருப்பவரிடத்தில், அந்தஸ்தில்லை; அந்தஸ்திருப்பவர்களிடத்தில் அழகில்லை! அறிவு படைத்தோரிடம் பொருள் இல்லை; பொருள் படைத்தோரிடம் அறிவில்லை! சீமான் இதயத்திலே இரக்கம் இல்லை; இரக்க மனம் படைத்தோர் சீமானாக இல்லை!

அந்த வகை இந்த தோகை மயில்!

பணக்காரன்:

அழகி — என்றுமட்டும் கூறினால் போதாது அந்த வனிதையின் ரூபாலாவணியத்திற்கு! அவளுக்கு ஈடு இணை இன்றும் இல்லை; அன்றும் இல்லை; இனி என்றும் இருக்காது!

என் விழிகள் என்று அவளின் வேல் விழிகளை சந்தித்ததோ, அன்றே அவள் என் இதய சிம்மாசனத்தில் ஏறி உட்கார்ந்துக் கொண்டாள். அவளை நினைக்கும் தோறும் என் நெஞ்செல்லாம் இனிக்கிறது.

அவளின் புன்னகைக்கு ஈடாகுமோ இப்பூவுலகம்? அவளின் அதரத்தின்ஸ்பரிசத்திற்குஅவனியையே அடகுவைக்கலாமே? அவளைக்கண்டநாளிலிருந்துஊன் மறந்தேன். உறக்கம் துறந்தேன். துடிக்கிறேன், அத்துடியிடையாளை மனைவியாக்கிக் கொள்ள! ஆனால் அவளோ மண்குடிசையிலே மலர்ந்த ரோஜா! நானோ ராஜவம்சத்தை சேர்ந்தவன். அந்தஸ்து' வழி மறைக்குதே! சமுதாயத்தின் இரும்பு கரங்கள் என் கரங்களுக்கு விலங்கிடுகிறதே, நான் அவளுக்கு மஞ்சள் நாண் கட்ட முடியாதபடி!

அரண்மனை வாசமும் – ஆடம்பர வாழ்வும் ஏழை வீட்டு அழகியை மணக்க தடை விதிக்கிறதே!

ஐயோ! அவள் ஒரு சீமான் வீட்டில் பிறந்திருக்கக் கூடாதா! அல்லது நான் ஏழையாகவாவது இருந்திருக்கக் கூடாதா!

அந்தஸ்து என்பது ஒருமுள் வேலி, ஏழைகள் உள்ளே வர முடிவதில்லை; பணக்காரர்கள் வெளியே போகவும் முடிவதில்லை!

* * *

கவிஞன்:

என் கற்பனை பெற்றெடுத்த அழகிகளெல்லாம் இவளைக்கண்டால் நாணி ஓடுவர்! அவளை காணும்தோறும் ஆயிரம் ஆயிரம் கற்பனைகள் உதயமாகும்!

அவளின் முக மண்டலத்தின் தெரிசனம் எண்ணற்ற கவிதைகளுக்கு களனாகும்! அவள் சிரித்தால் சிந்து! பேசினால் பல்லவி அழுதால் அடாணா! இப்படி தீட்டிக் கொண்டே இருக்கலாம் காலமெல்லாம்! அவள் அருகிலிருந்தால் ஆயிரம் ஆயிரம் சாகாவரம் பெற்ற இலக்கியங்களை எழுதி குவித்துவிடுவேன்! நானோ ஏழை எழுத்தாளன்! அவளை காலமெல்லாம் மகிழ்ச்சி கடலில் வைக்க இயலாதே! வறுமையின் கோரப்பிடியில் சிக்கினால் இப்பதுமை முளியாகி விடுமே!

அறிவைக் கொண்டு பிழைப்பவனுக்கு அழகு வேலமரத்தைப் போன்றது; அருகில் வருபவருக்கு நிழல்தர அதனால் முடியவே முடியாது. அதுதான் போகிறதென்றால் அதன் முள் வேறு தைக்குமே!

* * *

ஏழை!

நானேஏழை? அவளும் ஏழைதான். அவள் 'அழகிற்கு' யாராவது செல்வந்தர்கள் வந்து கொத்திக் கொண்டுபோய் விட மாட்டார்களா? அழகு பொருள்களை ஏழைகள் பாதுகாக்க இரும்புப் பெட்டியா வைத்திருக்கிறார்கள்.

ஏழைக்கு அழகு ஒரு நிலவு, பார்த்து பரவசப்படலாமேத் தவிர தொட்டு விளையாட முடியாது!

* * *

தத்துவவாதி!

அவள் அழகிதான்; ஆனால் அழகு இருக்கும்மிடத்தில் ஆபத்திருக்குமே! விளக்கருகில் நிழலைப் போல! ரோஜாவில் முள்! பூவில் பூநாகம்!

உடலழகு இருந்தால் போதுமா? உள்ளழகு வேண்டாமா? அழகு என்பது தோன்றி மறையும் வானவில்! அந்த வானவில்லை நம்பி பயணம் செய்ய முடியாது!

* * *

அழகியின் தாய்!

ஏன் பிறந்தாள் என் வயிற்றில் எத்தனையோ சீமான்கள் வீடிருக்கிறதே, அங்கே பிறந்திருக்கக் கூடாதா? ஒருவன் கையில் பிடித்துதரும் வலர வயிற்றில் நெருப்பை அல்லவா கொட்டிக் கொண்டிருக்கவேண்டும்.

ஏழைகள் வீட்டில் அழகிகள்பிறப்பது ஆபத்தை அல்லவா விலைக்கு வாங்கும்!

* * *

அழகி!

நான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்? பெண்ஜென்மமோ, புண்ஜென்மம் என்பார்கள்; அதுவும் ஏழை வீட்டில் பெண்ணாகப் பிறப்பதைவிட, நாயாக, பேயாக பிறந்திருக்கலாம்...அதுவும் நான் அழகியாக பிறந்துவிட்டேன்.

என்னை மணக்கவோ, யாரும் முன்வரவில்லை; ஒவ்வொருவரும், ஒவ்வொரு விசித்திரமான வியாக்யானங்களை கூறினர், என்னை மணந்துக்கொள்ளாததற்கு! அந்தஸ்து — ஆடம்பரம் – வறுமை – குணம் எதை எதையோ சாக்கிட்டு என்னைச் சாக்காட்டிற்கு துரத்துகின்றனர்! வாழ்க்கை ஒரு பூககாடு என்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை, வாழ்க்கை வேக்காடாகி விட்டது!

தாலியிழந்தவளின் அரவணைப்பிலே வளருபவள் நான். வேலி இல்லாத வயல் காளைகளுக்குநலவிருந்தாகிறதல்லவா? அதுபோல், வாலிபர்களின் காமக்கணைகளுக்கு நான் இலக்காகி விடுகிறேன்; ஆண் துணை இல்லாத வீடு, எந்த நேரத்தில் எந்த பக்கத்திலிருந்து ஆபத்து வருமோ? அன்னையோ, இரவும் பகலும் புலம்புகிறாள்.

மங்கள முரசும்கொட்ட, மாவிலை தோரண பந்தலில் என் அழகிற்கு ஈடான ஆடவனின் கரம் பிடிக்க கனவுகண்டேன். என்கனவு கனவேயாகிவிட்டது; கலைந்து விட்டது என் கற்பனை ஓவியம். அழிந்துவிட்டது என் நெஞ்சத்து எழில் சித்திரம்.

இனி, எனக்கு 'தகுந்த' ஜோடி கிடைக்காது; கிடைக்கவே கிடைக்காது. நான் கொடுத்து வைக்காதவள்; அழகியாக பிறந்தும் ஆனந்தமாக வாழ இயலாதவள்.

ஆகவே, வலியச் சென்றேன். ஊரார் 'குருபி' என்றழைத்தவரைஊர்அறியமணந்துக்கொண்டேன். அவரின் உடல் 'குருபம்' தான்; ஆனால் உள்ள[illegible] அவர் அவலட்க்ஷ[illegible] பிரதிநிதிதா[illegible] ஆனால் இதயம் அழகின் இருப்பிடம். அபலை ஒருத்திக்கு வாழ்வளிக்க முன் வந்தது அவரின் பெருந்தன்மையைக் காட்டுகிறதல்லவா? அந்த பெருந்தன்மைக்காக அவரின் பாதங்களை பூஜிப்பது என் கடமை அல்லவா? அருவருக்கும் அந்த உருவத்தோடு, நான் ஆனந்தமாக வாழ்கிறேன்! உலகம் எதைச் சொன்னால் எனக்கென்ன?

"அழகு பெண்களுக்கு ஒரு அற்புத ஆயுதம் என்பர், ஆனால் அந்த ஆயுதம் ஏழை வீட்டு பெண்களுக்கு பாதுகாப்பளிப்பதைவிட, தற்கொலை செய்துக் கொள்ளவே உதவுகிறது!

காலமும், சூழ்நிலையும்தான் மானிடர்களின் எண்ணங்களை உருவாக்குகின்றது என்பதற்கு அழகியின் வரலாறு சாட்சி கூறுகின்றதல்லவா?

★

ஆண்டவன் சந்நிதானத்தில் அரும்பு கருகியது!

பச்சிளம் பாலகி· பால் மணம் மாறாப் பாவை. உலக விவகாரம் அறியாத கின்னஞ் சிறு சிட்டு· மலராத மொட்டு! ஆண்டவன் ஆலயத்திற்குச் சென்றாள்.

அந்த மோவா அரும்பை–தாவாச் சிறுமானை. கெடுத்து விட்டானும் ஒரு கயவன்; அவன் காலியல்ல; கோயில் பூசாரி!

ஆண்டவனின் சன்னிதானத்திற்கு அனுமதிச் சீட்டு வழங்கும் பூசாரிதான் இந்த அக்கிரமத்தை செய்திருக்கிறான்!

ஆண்டவனே இத்தகைய சரசங்கள் பலவற்றை செய்திருக்கின்றானே நாம் இந்த சரசம் செய்வதில் தவறு என்ன என்று நினைத்தானே அந்த மூடன்!

ராசிபுரத்தில் நடந்திருக்கிறது இந்த நெஞ்சுவேகும் செயல்! பதினெட்டு வயது நிரம்பிய கந்தமலை என்ற பூசாரி ஐந்தரை வயது சிறுமி வஸ்தலாவை கருகச் செய்தானும் பாவி!

'கோயில் – கள்ளர்கள் குகை' என்றார் ஏசு. கோயில் விபசாரிகளின் சந்தை என்றார் காந்தி! ராசிபுரத்தில் நடந்துள்ள இந்த நிகழ்ச்சி இதைத்தானே காட்டுகிறது.

பூசாரி என்ற போர்வையில் புலிகள் நடமாடுகிறார்கள்; ஆண்டவன் பெயரைக்கொண்டே அக்கிரமங்கள் செய்கிறார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே ஆண்டவன் கைலாயத்தில் தூங்குகின்றான். அவன் விழிப்பது எப்போது? இந்த அவலை நிலை மாறுவது எப்போது?

(7-ம பக்கத் தொடர்ச்சி)

மொழிப் புலமையே விளங்குகிறது. பதினெட்டாண்டு வயது இளைஞராகத் திகழும் போதே ஆங்கிலம், பிரஞ்சு, இலத்தீன் போன்ற பல்வேறு மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தார். அது மட்டுமல்லாமல், அம் மொழிகளிலுள்ள இலக்கியங்கள் பலவற்றையும படித்திருந்தார். பதினாறு ஆண்டு இளைஞராகயிருக்கும்போதே பிரெஞ்சு இலக்கியத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளர் மாபசானின் எழுத்தோவியங்கள் அனைத்தையும படிக்கும பெரு வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது. மாபசானின் கருத்துக்கள் பசுமையாக என்றும இவரின் எழுத்துக்களில் இழையோடிக் கொண்டிருப்பதற்கு இதுதான் காரணம.

சலியாத உழைப்பாளி–விடா முயற்சி கொண்டவர். எண்ணியதைச் சாதிக்கவேண்டும் என்பதிலே மிக்க கண்ணும் கருத்துமாக செயலாற்றுபவர். வசன நடை எழுதக்கற்றுக் கொண்டதே தனது தளரா முயற்சியினால்தான். எழுதுகின்ற ஆற்றலை இயற்கையிலேயே, உணர்வு பூர்வமாகபெற்றிலேன் என்றாலும், தொடர்ந்த உழைப்பினால் அந்தப் பயிற்சினை வளர்த்துக் கொண்டேன் என்றுமாம், [illegible]களே ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார்,

வால்டேர் போன்ற பிரஞ்சு எழுத்தாளர்கள் இவரின் மனதிற்கு மிகவும் பிடித்தமானவர்கள், வேறுபாடின்றிசகலருடைய ஏடுகளையும் படிக்கும் குணம் இவரிடத்தில் உண்டு. ஆனால் தனக்கென ஒருநடையினை ஏற்படுத்தி தனது எண்ணங்களைச் சொல்லி வருகின்றார். எளிமை, தெளிவு, சுவை ஆகிய மூன்று அம்சங்களும் எழுத்துக்களில் பின்னிக்கிடக்க வேண்டும். அப்போதுதான் மக்களால் அவைகள் விரும்பிப் படிக்கமுடியும் என்பது இவரின் முடிந்தமுடிவு.

மனித சுபாவங்களை கூர்ந்து நோக்குவதில் வல்லவர். அவைகளை அடிப்படையாகக்கொண்டு எழுவதால்தான் புனைந்துள்ள நவீனங்களில் மறக்கமுடியாத பாத்திரங்களை, காலத்தையும் வென்று, மனதில் நின்று, நீதி போதிக்கும் குணச்சித்திரங்களை உருவாக்க அவரின் வலிவுள்ள எழுது கோலால் முடிகிறது. கதை புனைவோர் உலகில் முடிசூடா மன்னனாக அவர் விளங்கும் ஆழ்ந்த ரகசியம் இதுதான் "மனிதன் பல்வேறு உணர்ச்சிகளுடன் நெருங்கிப் பிணைக்கப் பட்டுள்ளன. சூழ்நிலைகளும் உணர்ச்சிகளும்தான் அவனது செயல்களை நிர்ணயிக்கின்றன. அவனது உறுதி அதற்குமுன் சக்தியற்று விளங்குகின்றது" — என்ற கருத்துதான் சாமர்சட்மாம் அவர்களின் எழுத்துக்கள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது.

இலக்கியச் சந்தையிலே

"சாமர்செட் மாம்!"

நம்முடைய தலைமுறையில் ஆங்கில இலக்கிய வானில் ஒளி சிந்தும் தாரகையாய் விளங்கும் எழுத்து வேந்தர்களில் சாமர் செட்மாம் அவர்களும் ஒருவரா வார். அவரது எழுச்சியூட்டத் தக்க எழுத்துக்கள் ஆங்கில மொழியறிந்தோரின் இதயங் களிலெல்லாம் ஆர்வத்தையூட்டி தனியானதோர் நல்ல இடத்தை அவருக்குப் பெற்றுத் தந்துள் ளது. கதைக்காக அவர் கையா ளும் கருப்பொருள்கள் தனித் தன்மை பெற்றவை. அவைகளை ஆற்றொழுக்குப் போன்ற நடை யில் தெளிவாகவும், விளக்கமாக மாகவும் எடுத்துச் சொல்லும் வகையினால் அவரின் ஏடு களுக்கு தனித்ததோர் காந்தக் கவர்ச்சியுண்டு.

தனது சொந்த வாழ்க்கையின் அநுபவங்களைப் பின்னணியாகக் கொண்டுதான் அவர் கதை புனை வது வாடிக்கை. மனித சுபாவங் களை அப்பட்டமாக எடுத்து அவ னிக்கு பளிச்சிட்டுக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்கு கிறது, அவரது ஏடுகள்.

கடந்த ஜனவரித் திங்களோடு சாமர் செட் மாம் தன்னுடைய எண்பத்தி ஐந்தாவது ஆண்டைக் கடந்துள்ளார். அவரது எழுத் துலக சேவை பற்றி எண்ணற்ற வர்கள் பாராட்டியுள்ளார்கள். கணக்கற்ற புத்தகங்கள் [illegible] வந்துள்ளன. என்றாலும் அவற் றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல "பாரபட்சமற்ற படப் பிடிப்பு" என்ற ஏடு அமைந் துள்ளது. அவருடன் சென்ற நாற்பதாண்டுகளாக நெருங்கிப் பழகிய டாக்டர் காரல் பெய்வர் என்ற நியூயார்க் பல்கலைக் கழக ஆங்கிலப் பேராசிரியர் கருத் தைக் கிளறும் இந்த ஏட்டைத் தீட்டியுள்ளார். நீண்ட நாட் களாக மனம் ஒன்றிப் பழகியவர் கள். அவரைப் பற்றியும் அவ ரது ஆற்றல்களைப் பற்றியும் அறிய மிகுந்த வாய்ப்புகள் இருந்திருக்கின்றன. சாமர்சட் மாம் ஒரு முறை "எனது வாழ்க்கையைப் பற்றி மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் டாக்டர் பெய்வர் அறிவார். இத்தனை ஆண்டுகள் என்னுடன் பழகியும், எனது வாழ்க்கை வர லாற்றை எழுதி, ஒரு குறிப்பிட்ட அளவு சம்பாதிக்கவில்லை என் றால், அவரைவிட உலகில் ஏமாளி யாருமில்லை என்றே கருது வேன்" என்று குறிப்பிட்டார். அவரின் விருப்பம் வீண்போக வில்லை; சாமர் செட் மாகத்தின் வாழ்க்கையில் தென்பட்ட சுவை மிக்க சம்பவங்களையும், அவர் தீட்டியுள்ள நவீனங்கள் பற்றி யும் சமன்செய்து, காய்தல் உவத் தலின்றி மேற்க்கண்ட புத்தகத் தின் வாயிலாகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் டாக்டர் பெய்வர்.

சாமர்சட் மாம் அவர்களின் திறமை உலகுக்குத் தெரிந்ததே ஒரு சுவையான சம்பவமாகும். புகழ் பெற்ற எழுத்தாளர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி னால் ஒரு உண்மை எல்லோரு டைய வாழ்க்கை ஏட்டிலும் பின் னிக் கிடப்பதை உணரமுடியும். அவர்கள் அனைவரின் ஆற்றல் களையும் திறமைகளையும் தொடர்ந்து உலகம் மிக அலட்சி யப்படுத்தியே உள்ளது. போற் றிப் பாதுகாக்கவேண்டிய சிலர் கள் எல்லாம்புறக்கணிக்கப்பட்ட சோக வரலாறு எத்தனையோ... கடல்முத்துப்போல, காட்டுநிலவு போல அவர்களின் வல்லமைகள் அனைத்தும் கேட்பாராற்று, கிடந் துள்ளன! பலரின் திறமைகள் கவனிப்பாரற்றே அழிந்துள்ளன. அந்த விதிக்கு சாமர்சட் மாம் அவர்களும் விலக்கல்ல. காலம் கனியும் என்று நம்பிக்கையுடன் காத்திருந்தார். அது வீண் போகவில்லை.

பாரிஸ் பட்டணத்தில் 1874ம் ஆண்டு வழக்கறிஞர் ஒருவருக்கு மகனாகத் தோன்றிய மாம், பத் தாண்டுகள் நிறைவேறுவதற் குள் பட்ட துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. எட்டாவது வயதை எட்டிப் பிடிக்கும்போது தாயை இழந்த தனயனானார். பத்தாண் டுப் பாலகனா யிருக்கும்போது, இவரின் தந்தை இவரை அனா தையாக்கி இயற்கை எய்தினார். சிறிய தந்தையின் அரவணைப் பில் சில நாட்கள் கழித்தார். ஜெர்மன் மொழி பயில வேண் டும் என்ற விருப்பம் அவருக்கு எப்போதும் உண்டு! அதனைச் செயல்படுத்த ஜெர்மன் நாடு சென்று பல ஆண்டுகள் தங்கி யிருந்து அம் மொழியினை மாசு மறுவறக் கற்றுப் புலமைப் பெற் றார். ஜெர்மனியிலிருந்து திரும் பியவுடன் ஏதாவது வேலையில் சேரவேண்டும் என்ற நிலைமை உருவாகியது. இயற்கையி லேயே பிறருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் சுபாவம் பெற்றவரல்ல மாம். ஏது செய்வது, என்ன முடிவு எடுப்பது; என்பதேதெரி யாமல் சில நாட்களைக் குழப்ப மான நிலையில் கழித்தார். இறுதி யில் அவரின் சிறிய தந்தை முத லியோரின் கட்டாயத்தின்பேரில் மருத்துவர் பயிற்சி பெற மருத் துவ விடுதியில் சேர்ந்தார்.

இரண்டாண்டுகள் உருண் டோடின. எப்படியோ தனது பயிற்சிக்குறிய காலத்தைக் கடத் தினார். அதே மருத்துவ விடுதி யில் கணக்காயராகச் சேர்ந்தார், நிர்ப்பந்தத்தினால் ஏற்றுக் கொண்ட கணக்காயர் பொறுப்பு பிற்காலத்தில்அவருக்குப் பெருந் துணையாய் அமைந்தது. மருத் துவ விடுதி பல்வேறு உணர்ச்சி கொண்ட உள்ளம் கொண்டோர் சந்திக்கும் இடம் – அவர்களைக் காணும்போதும், கலந்து உரை யாடும் போதும் புதுப்புதுப் பாடங்களை உணர்ந்து கொண் டார். உலகத்தைப் பற்றிய பல்வேறு பிரச்சனைகளை எண்ணிப்பார்க்கவும் அவைகள் தூண்டுகோலாகவும் அமைந்



தது என்றே மாம் பலமுறை கூறியுள்ளார்.

சிறிய தந்தையின் வற்புறுத் தலுக்காக மருத்துவத் துறையில் கவனம் செலுத்தினாரே தவிர, இயற்கையில்அம்முனையில் துளி யேனும் அவருக்கு ஆர்வம்கிடை யாது. ஏதாவதுஎழுதவேண்டும் என்றஉள்ளத் தவிப்பு அவரிடம் எப்போதும் காணப்பட்டது. முய ற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது முது மொழியல்லவா? அது மாம் அவர்களைப்பொறுத்த வரை முழு உண்மையாயிற்று! இருபத்தி மூன்றும் ஆண்டு முடி வதற்குள்ளேயே இவர் தீட் டிய புத்தகம் அச்சேறிற்று என் பது மட்டுமல்ல, முதல் புத்த கமே கற்றோர் அனைவரின் கவ னத்தை ஈர்த்து பாராட்டுதலை யும் பெற்றது.

மாம் தீட்டிய நவீனங்களில் "மனித அடிமைத்தனம்', என்ற நவீனம் தலை சிறந்தது என்று கருதப்படுகிறது. 1915–ம் ஆண்டு இதனை வெளியிட்டார். நான்கு ஆண்டுகள் செலவழித்து இதனை எழுதினார் என்று சொல்லப்படுகிறது. தன்னுடைய வாழ்க்கைச் சம்பவங்களை அடிப் படையாகக் கொண்டே இந் நவீ னத்தைப் புனைத்துள்ளார். நவீ னங்கள் மட்டுமல்லாமல் நாடக கங்கள், சிறு கதைகள் பலவும் சுவைபடத் தீட்டியுள்ளார் பய ணக் கட்டுரைகள் எழுதுவதிலும் மிக்க வல்லமை பெற்றவர். அத் துறையிலும் பல நூல்கள் வெளி யிட்டுள்ளார்.

இயற்கையிலே அவர் கூச்சமான சுபாவம் கொண்ட வர். பிறரிடம் நெருங்கிப் பழகி உரையாடும் பழக்கத்தை விரும் பாதவர். தனித்திருந்து சதா புத் தகங்களைப் படித்துக் கொண்டி ருக்க வேண்டும் என்பதுதான் அவரின் விருப்பம். கணநேரம் கூட வீணாக பொழுதை கழித்ததில்லை என்பதற்கு எடுத் துக்காட்டாக அவர் பெற்றிருந்த

(6–ம்பக்கம் பார்க்க)

புகழ் கொடுத்த 'மழை'!

★

[illegible]ாமர்செட் மாம் ஏராள மான நாடகங்களும் நவீனங்களும் [illegible]யுள்ளார் ஆனால் அவை எதுவும் அவரை எழுத்தாளர் என உலகுக்கு அறிமுகப்படுத்தவில்லை. அவர் தீட்டிய சிறு கதை யொன் றின் வாயிலாகத்தான் அவனி அவரின் திறமையைக்காண முடிந் தது, 'சாடி தாம்சன்' என்ற சிறு கதை யொன்றினைத் தீட்டினார். அதனை பத்திரிகை ஒன்றில் வெளிவந்து காண வேண்டுமென்பது அவரின் தணியாத விருப்பம். பத்திரிகை ஆசிரியர் பலரை நேரி லேலே சென்று வெளியிடக்கேட்டார்! எடுத்துச் சொன்னார். அனைவரும் கேளாக் காதினராகவே காட்சியளித்தனர். ஏற்றுக் கொள்ள மறுத்தனர், புறக்கணிப்பையே பரிசாக நல்கினர் — சோர்ந்த உள்ளதுடன் தங்கியிருந்த அறைக்குத் திரும்பிவந்து, மேஜையினுள் 'சிறு கதை'யினை போட்டுவிட்டு, நீண்டநாள் அதைப்பற்றி கவனம் செலுத்தாமலிருந்தார்.

ஓர் நாள் இரவு அவரின் நண்பர் ஜான் கால்டன் என்பார் உடன் தங்கியிருந்தார். தூங்குவதற்கு முன்பு ஏதாவது படிக்க வேண்டுமென்று விரும்பினார். நீண்டநாட்கள் மேஜைக்குள்ளேயே உறங்கிக் கொண்டிருந்த 'சாடின் தாம்சன்' என்ற சிறுகதையினை அவரிடம் மாம் கொடுத்தார். அது கால்டன் உள்ளத்தில் கிளர்ச் யினை மூட்டியது. அவரின் வாழ்வில் அந்தச் சிறுகதை புதியதோர் திருப்பத்தை நிச்சயம் உருவாக்கும் என அவரின் உள் ளுணர்வு சுட்டிக்காட்டியது. அந்தச் சிறு கதையினை அடிப்படை யாகக் கொண்டு நாடகம் ஒன்று எழுத மாம் அவர்களை கால்டன் பன்னிப் பன்னி வேண்டினார். ஏற்கனவே சலிப்புள்ளதோடு உல விய மாம் நண்பரின்வேண்டுகோளுக்கு உடன் பதிலிருக்கவில்லை. என்றாலும் தொடர்ந்து கால்டன் வற்புறுத்திக் கொண்டதின் விளை வாக 'மழை' என்ற தலைப்புச் சூட்டி அந்தச் சிறுகதையினை நாடகமாக எழுதினார். எவரும் எதிர்பாராத வகையில் திக்கெட்டும் வெற்றிக்கொடி அந்தநாடகம் நாட்டியது. அன்றுதுவங்கிய அவரின் புகழின் பவனி தங்குதடையின்றி பீடுநடை போட்டுச்செல்லுகிறது.

சில ஆண்டுகட்கு முன்பு, நியுயார்க் நகரிலுள்ள நாடக விமர்சகர்கள் உலகத்தின் தலை சிறந்த நாடங்களை தேர்ந்தெடுக்க போட்டியொன்று நடத்தினார்கள். பத்து நாடகங்களை சிறந்த நாட கங்கள் என்று தேர்ந்தெடுத்தார்கள். நாடக வேந்தன் ஷேக்ஸ் பியர் தீட்டிய'ஹாம்லட்' என்ற நாடகம்தான் உலகில் இதுவரையில் எழுதப்பட்ட நாடகங்களில் முதனமையான நாடகம் என்று தீர்ப்பளித்தனர். உலகத்தின் இரண்டாவது சிறந்த நாடகம் இதுதாவ என்று, ஷேக்ஸ்பியர் எழுதிய 'மேக்பத்தை' யோ அல்லது வேறு எந்த நாடகத்தையோ முடிவு கூறவில்லை. சாமர்சட்மாம் தீட்டிய 'மழை' என்ற நாடகம்தான் அந்தப் பெருமைக் குரியது என்று தீர்ப்புக் கூறினார்கள் என்றால், நாடகத் தின் பெருமையினை எவரும் எளிதில் உணரமுடியும்.

நாகபுரியில் அழைப்பிதழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையைக் காப்பாற்றவே காந்தியார் சுயராஜ்ஜிய போராட்டத்தை நீடித்து வந்தார். காங்கிரஸ் எல்லா மக்களுக்கும் பொதுவானது, முஸ்லீம் லீகோ முஸ்லிம்களின் நலனை மாத்திரம் கவனிக்கும் வகுப்புவாதக் கட்சி என்பதுதான் அவர் வாதம். ஆகவேதான் 1938க்குப்பிறகு பல சந்தர்ப்பங்களில் நடந்த சுதந்திர பேச்சு வார்த்தைகள் முறிந்துபோயின. கடைசியாகப் பிரிக்கப்பட்ட இந்தியத் துணைக் கண்டத்திலாவது, அந்த முஸ்லீம் லீகை புறக்கணிக்க அரும்பாடுபட்டனர், காங்கிரஸ தலைவர்கள். வடநாட்டிலே ஏற்பட்ட அகதிப் பிரச்சினையைக் காரணம் காட்டி சென்ற பத்து ஆண்டுகளாக அந்தக் கட்சியை அழிக்க முயன்ற வண்ணமிருந்தனர். ஆனால் திடீரென்று அரசியல் வானில் ஏற்பட்ட மாறுதல்கள், காங்கிரசின் கொள்கைகளை காற்றில் பறக்க விட்டன! முஸ்லீம் லீகோடு தொடர்பு கொண்டிருந்த மற்றக் கட்சிகளை வகுப்புவாதிகள் என்று சாடிய அதே காங்கிரஸ் இன்று அதுவும் "வகுப்புவாதி"களோடு தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது!

விடுதலை பெற்ற இந்திய உபகண்டத்தை சாஸ்வதமாக என்றும் ஆளலாம் என்று மனப்பால் குடித்து வந்த காங்கிரஸ்தலைவர்களுக்கு கேரளத்தில் கம்யூனிஸ்டு சர்க்கார் ஏற்பட்டது பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. தங்கள் கண்ணெதிரே, மாற்றான் வாழக் காண்பதை சகிக்க முடியாத காங்கிரஸ் தலைவர்கள், ஜனநாயகத்தை உதறித் தள்ளி, அடிப்படை உரிமைகளை ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு, நம்பூதிரிபாட் மந்திரி சபையை ஆட்சியிலிருந்து விலக்கினர். இப்பொழுது மறுபடியும் கம்யூனிஸ்டுகளே பதவியில் வந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்திலே, ஆண்டாண்டு காலமாக கொண்ட கொள்கையை காற்றிலே பறக்க விட்டு விட்டு முஸ்லீம் லீகோடு கூட்டு முன்னணி அமைக்கிறார்கள்.

கொள்கையை மீறி நடப்பவர்களை வெளியேறச் சொல்லும் அம்மையாரும், அவர் சகாக்களும் கடைபிடிக்கும் கொள்கை இதுதான்!

காங்கிரஸ் அடிக்கும் 'பல்டி'யைக் கண்டு அவர்களுக்கே வெட்கமாக இருக்கிறதுபோலும். ஆகவேதான், வழக்கத்திற்கு விரோதமாக இந்தகூட்டு முன்னணி அமைக்கும் முடிவைத் தெரிவிக்கும்போது ஆயிரத்தெட்டு அடைமொழிகளும், விளக்கவுரைகளும் கூறப்பட்டன.

"முஸ்லீம்லீக், அதுவும்கேரள முஸ்லீம்லீக் முழுக்க, முழுக்க வகுப்பு வாதஸ்தாபனம் அல்ல! அவர்களுக்கு சில இடங்களை விட்டுக்கொடுத்து விடுகிறோம்!'

கேரளாவில் எந்தக் கட்சியிலும் வகுப்பு வாதிகள் இல்லாமலில்லை!

கிருஸ்துவர், முகம்மதியர், நாயர் இப்படிபலதிறப்பட்டஜாதியினர் பரவலாக எல்லாக் கட்சியிலுமிருக்கின்றனர்!

இதோடு, நாம் முஸ்லீம் லீகோடு ஐக்கியமாகிவிடவில்லை!

இப்படிவார்த்தைகளிலே நர்த்தனமாடி இருக்கிறாரே தவிர, நடந்த விஷயம் மறுக்க முடியாத கொள்கைக் குழப்பம் என்பது யாரும் உணரக்கூடியது. காங்கிரஸ் முஸ்லீம்லீக் கூட்டு, முன்னணி அமைவது காங்கிரஸின் கொள்கை சூன்யத்தையும், பதவிப் பித்தையும்தான் காட்டுகிறது.

பாழ் வழக்கம்!

: க[illegible] வேழவேந்தன் :

கீச்சென்று குரலெழுப்பும் கிளியே! எங்கள்
கேடுகெட்ட சமுதாய வழக்கைக் கேளாய்!
சேச்சே! உங்களிடம் துளியும் காணோம்;
தித்திக்கும் மணவாழ்வில் தடையே இல்லை!
ஈச்சமர நிழலைப்போல் மாறும் எங்கள்
இதயமற்ற சமுதாயப் போக்கை, நாளும்
பூச்செண்டு மங்கையரின் வாழ்வைத் தீய்த்துப்
பொடியாக்கும் கதையைக்கேட் டிருக்க
[மாட்டாய்!

காதலென்பார் உரிமையென்பார் கற்பு என்பார்
காலமெலாம் பெண்பெருமை பேசித் தீர்ப்பார்!
காதலெனும் பூக்காட்டில் ஆண்கள்மட்டும்
காட்டாட்சி புரிவதற்கே வழிகள் செய்வார்!
மாதர்களில் பலபேரைக் காதலித்து
மணம்சுவைக்க உரிமையுண்டாம்! பெண்டிர்
[இந்தப்
பாதையிலே அடிவைத்தால் 'கணிகை' யென்[illegible]
பட்டமென்றும் காளைக்குக் 'கணி[illegible]ன்' [illegible]

இலைநிழலில் காதல்செயும் கிளியே! உங்கள்
இனத்தினிலே மணத்துறையில் பேதம் ஏது?
நிலைபெற்ற மனைவியினை இழந்தால் ஆணும்
நிம்மதிக்கு ஒருத்தியினை மணக்க லாமாம்!
சிலைபோன்ற பெண்ணுக்குக் கணவன் போனால்
திருமணமே கூடாதாம்! துணிந்து மற்றோர்
தலைவனையே அவள்மணந்தால் 'வேசி' என்பார்
தரங்கெட்ட ஆண் 'வேசன்' ஆவதில்லை!

உணர்ச்சியெனில் இருவருக்கும் பொதுவே என்று
ஒப்புகின்றார்! ஆனாலும் ஆண்கள் மட்டும்
அணங்குகளை அடுக்கடுக்காய் மணக்க லாமாம்!
அணுவளவு பிறழ்ந்தாலும் பெண்டிர் தம்மைப்
பிணத்திற்கு ஒப்பாக்கி 'விலைமா'தென்று
பேசாத சொற்களினால் வதைப்பார்! ஐயோ!
பணம்கொடுத்து கற்பைவிலை வாங்கும் ஆணோ
பாழ்நாட்டில 'விலைமனிதன்' ஆவ தில்லை!

காதல்ஒரு தேனாறு; அதன்கண் மூழ்கிக்
கலத்தல்ஒரு பேரின்பம் என்பார்; ஆனால்
காதலரும் ஒருவனுக்குச் சமுதாயத்தில்
காதலிகள் பலரிருக்க தடையே இல்லை!
காதல்செயும் மங்கைஅவர் சுவட்டில் சென்றால்
கல்லெறிந்து 'விபசாரி' என்று சொல்வார்!
வேதனையை என்சொல்வேன் கிளியே! ஆணை
'விபசாரன்' என்றழைக்க நாதி ஏது?

கே. ஏ. மதியழகன் சுற்றுப்பயணம்.

★

அக்டோ. 10 சென்னை.
,, 11,12,13 சிதம்பரம்.
,, 17, 18 சென்னை மாநாடு.
,, 19 கன்னிபுத்தூர்

ஓரிசாவில் ஜமீன்தார்கள்—ராஜாக்களின் கட்சியான கனதந்திர பரீட்சத்தோடு கூட்டு சேர்ந்ததைவிட, கேரளகூட்டு காங்கிரஸின் உண்மையான சொரூபத்தைவெளிப்படுத்துகிறது.

இதேபோல் பம்பாய் மாநிலப் பிரச்சினையிலும் காங்கிரஸ் கொள்கை மாறிக்கொண்டே வருகிறது. நாடுபூராவும் ஒன்றுதான்; மொழிக்கும் ஆளும் வசதிக்காகவும் ஏற்படுத்தப்படும் பிரிவுகளுக்கும் என்ன சம்பந்தம் என்றெல்லாம் இதுவரை கூறி வந்தனர். மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆந்திர மாநிலம் கேட்டு அதற்கு பொட்டி சீராமலு உயிர்விட்டு, பிரகாசம் அவர்கள் காங்கிரசை விட்டு விலகிச் சென்றபின்தான் மாநில புனரமைப்பே ஏற்பட்டது. இருந்தும் அந்த புனரமைப்பில் ஆந்திரம், கருநாடகம், கேரளம் முதலிய மொழிவாரி மாநிலங்களை உருவாக்கிய காங்கிரஸ் பம்பாய் மாநிலத்தை பிரித்து குஜராத்தியர்களுக்கும் மராட்டியர்களுக்கும் தர வேண்டிய உரிமையைக் கொடுக்க மறுத்தது. காரணம் அன்றிருந்த நிலைமை, பம்பாயில் வசிக்கும் பணமூட்டைகளை திருப்தி செய்ய வேண்டியிருந்[illegible] ஒரு நிதிமந்திரி ராஜினமா செய்தும் கூட பிரச்னையை கவனிக்கமறுத்தனர். ஆனால் இன்று அதே பிரச்னையை தேடிப்போய் முடிவுகாண்கின்றனர். காரணம், இங்கும் சுயநலம்தான்!

மராட்டிய மண்டலம் பிரிக்கப்படா விட்டால் அடுத்த தேர்தலில் பம்பாய் மாநிலத்திலும் காங்கிரஸ் தோல்வியை எதிர்நோக்கவேண்டியிருக்கும்! மொழிவழி மாகாணப் பிரச்னை அந்த அளவுசூடேறியிருக்கிறது அங்கு.

இப்படி தன்னுடை பதவிக்கு ஆபத்துவரும் போதெல்லாம் கொள்கை மாற்றங்கள் செய்யும் காங்கிரஸின் தலைவர், மற்றவர்களை காங்கிரஸிற்குள் வருமாறு அழைத்ததிலும் ஆச்சரியமில்லை! இன்று வெளியேறச் சொல்வதிலும் அர்த்த மில்லாமில்லை!

யார், எந்தக் கொள்கையோடும் காங்கிரஸில் இன்று இருக்க முடிகிறது. ஆகவேதான் எல்லோரையும் கொள்கை வேறுபாட்டை மறந்து உள்ளே வரும்படி அழைக்கிறார், இந்திரா காந்தி. அதேபோல் அவர்கள் விருப்பப்படி மாற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகளை பின்பற்ற முடியாமல் ஒரே கொள்கையைக் கடைப் பிடிக்கிறநல்லவர்களை வெளியேறச் சொல்கிறார்!

ஆகவே அவர்நாகபுரியில்கூறியதற்கும், நவீனபுரியில் கூறியதற்கும் அடிப்படையில் வித்தியாசமில்லை — உள்ளர்த்தங்களை உணர்ந்து படித்தால்!

அச்சிடுபவர்: கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி வித்தோ ஓர்க்ஸ், 34, சின்னதம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.